1975 அக்டோபர் 23]

பரிசிலனை செய்கிறது. எந்த எந்த ஜாதி நாய்கள் என்று பார்க்கும் போது, கிழக்கு ஜெர்மனி, மைசூர், ஐதராபாத், கேரளா போன்ற இடங்களிலிருந்து இப்படிப்பட்ட நாய்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை நாய்கள் என்ற எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், மிகக் குறைவான எண்ணிக்கை உள்ள பகுதி கோவை. அங்கு மூன்று துப்பறியும் நாய்கள் இருக்கின்றன. சென்னையில் ஒன்பது துப்பறியும் நாய்கள் இருக்கின்றன. மதுரையில் ஐந்து துப்பறியும் நாய்கள்தான் இருக்கின்றன. ஆகவே, எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல இது.

திரு. சி. ஆறுமுகம்: துப்பறியும் நாய்ப்படை ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமைக் காவல் நிலையத்திலும் வைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதுதான் சென்னை, கோவை, மதுரை ஆகிய பெரிய நகரங்களில் வைக்கப் பட்டுள்ளன. அடுத்து, திருச்சியில் நிறுவி முடிந்த பிறகு மற்ற நகரங்களைப்பற்றி யோசிக்க வேண்டும்.

கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கீடு

***3 வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் நாட்களில் அரிசன, பின்தங்கிய மாணவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும், தங்கள் கல்லூரிகளில் எவ்வளவு இடங்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரங்கள் அடங்கிய பட்டியலை வெளியிடும்படி கல்லூரிக் கல்வி இயக்குநரால் கேட்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர்களைச் சேர்க்கும் நாட்களில் வாராவாரம் ஒவ்வொரு பிரிவிலும் அரிசன, பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றில் எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், மீதமுள்ள இடங்கள் எவ்வளவு என்றும் அறிவிப்பு

வெளியிடுமாறு கல்லூரி முதல்வர்களுக்கு சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. அரிசன, பழங்குடி வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 18 விழுக்காடும், பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்கு 31 விழுக்காடும் இடங்கள் ஒதுக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும்போது, அரிசன, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குரிய விகிதாசாரம் சரிவரத் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்படுவதைத் தவிர்க்க, அரிசன, பிற்படுத்தப்பட்டவர்களின் நலன்களைக் கவனிக்கும் அதிகாரிகள் அங்கு சென்று ஆலோசனை நடத்த அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்தக் கல்லூரியிலாவது, எந்த இடத்திலாவது இந்த விதிமுறை பின்பற்றப்படாமல் புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு, அரசுக்கு அதுபற்றி புகார் வருமானால், கல்வித் துறை அதிகாரிகளும் அதுபற்றி விசாரணை நடத்தலாம்; அரிசன நலத் துறையைச் சார்ந்தவர்களும் விசாரணை நடத்தலாம். அப்படிப் பட்ட புகார்கள் எதுவும் வரவில்லை. வந்தால் அதுபற்றி கவனிக்கப் படும்.

திரு. ஆலடி அருணா : அரிசன மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அரசு நிர்ணயித்துள்ள இடங்களில் அந்த மாணவர்கள் போதுமான அளவு சேர்ந்திருக்கிறார்களா ? அல்லது நிரப்பப்படாத இடங்கள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக, 'ஓப்பன் கோட்டா'-வாகிய 51 சதவீத இடத்தை நிரப்பும்போது, பிற வகுப்பினர் மட்டுமல்ல, பிற்படுத்தப் பட்டவர்கள், அரிசனங்கள், மற்றுமுள்ளவர்கள் அத்தனை பேரும் தகுதி வாய்ந்தவர்களாக இருந்து மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவர்களெல்லாம் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 51 சத வீதம் முடிந்தபிறகு, 31 சத வீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களும், 18 சத வீதம் அரிசன, பழங்குடி மக்களும், தகுதி, திறமை அடிப் படையில் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். மதிப்பெண்கள் பெறுவ தைப் பொறுத்து அரிசனங்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் களும் பல்வேறு கல்லூரிகளில் அவரவர்களுக்குரிய விகிதாசாரத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரங்

1975 அக்டோபர் 23]

களெல்லாம் இருக்கின்றன. அரிசனங்களுக்குரிய 18 சதவீத இடங்களுக்கான மனுக்கள் சில கல்லூரிகளில் வந்திருக்கின்றன. வேறு சில கல்லூரிகளில் 15 சதவீதம், 12 சதவீதம், 7 சதவீதம், 8 சதவீதம் என்ற அளவில் மனுக்கள் வந்திருக்கின்றன. மீதப் படுகிற இடங்களை, அடுத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குத் தரவேண்டும் என்று நாம் வைத்திருக்கிறோம்.

திரு. கு. திருப்பதி: தலைவர் அவர்களே, மதுரையில் மீனாட்சி பெண்கள் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவிகளுக்கு அங்கு இடம் இருந்தும், அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? எடுத்துக்காட்டாக, சரோஜா என்ற மாணவிக்கு பி.ஏ. முதல் வகுப்பில் இடம் இருந்துங்கூட தரப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் பொதுப் படையாகக் குறிப்பிட்டேன். புகார்கள் எதுவும் வருமானால் விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்கள்சொல்லுகின்ற கருத்தைப்பற்றித் தனிக் கேள்வியாகப் போட்டால் அந்தக் குறிப்பிட்ட கல்லூரியினுடைய நிலைமைகளை ஆராய்ந்து அறிவிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அட்மிஷன் வழங்கப்படுவதிலே தனியார் துறை நிறுவனங்களிலே கண்டிப்பாக இந்த விகிதாச்சாரத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அந்தக் கல்லூரிகள் விகிதாச்சாரத்தைக் கடைப்பிடிக்கவில்லையென்றால் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க செயற்குறிப்பு இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த விதி முறைகள் அரசினர் கல்லூரிகளில் மட்டுமல்ல, தனியார் கல்லூரிகளிலும் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு இருக்கிறது. அங்கங்கேயுள்ள கல்லூரி அறிவிப்புப் பலகைகளிலே அந்த விவரங்களையெல்லாம் எழுதிவைக்கவேண்டுமென்று இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியிலே தாழ்த்தப்பட்டவர்களுக்காக, பிற்படுத்தப்பட்டவர்களுக்காக எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்பட்டன, அதிலே எத்தனை

மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இன்னும் எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் வைக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்யத் தவறியிருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம், சொல்லியும் கேட்காமல் இருந்தால் நாம் கொடுக்கிற மானியம் போன்றவற்றை நிறுத்துவதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களுக்காக நாம் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தை ஒதுக்கியிருப்பதன் நோக்கமே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கின்ற நோக்கம்தான். அப்படி ஒதுக்கினாலும்கூட அவர்களிலே உள்ள படித்த, வசதி படைத்தவர்களாக உள்ள மாணவர்களுக்குத்தான் அதிகமான இடங்கள் கிடைக்கின்றன, படியாத கிராமப்புற ஏழை மக்களுக்கு கூலிவேலை செய்கின்ற மக்களின பிள்ளைகளுக்கு அதிக ஸ்தானங்கள் கிடைக்கவில்லை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விகிதாச்சாரம் ஒதுக்கினாலும்கூட அவர்களுக்கு எல்லாம் கிடைக்கவில்லையென்ற நிலைமை இருக்கிறது. அவர்களிலேயே உள்ள படிக்காத, வசதியில்லாத ஏழை எளிய, கிராமப்புற மக்களுக்கும் இடங்கள் போதுமான அளவிற்குக் கிடைக்கக் கூடிய வகையிலே ஸ்பெஷல் கன்ஸிடரேஷன் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது பிற்படுத்தப்பட்ட மக்கள், அரிசனக் குடிமக்கள், பழங்குடி மக்கள் ஆகியவர்களுக்கு குறிப்பிட்ட அளவு விகிதாசாரங்கள் ஒதுக்கியிருக்கிறோம், மற்றவர்களுக்கு இவ்வளவு என்று ஒதுக்கி இருக்கிறோம். அதிலேயும் ஏழை எளியவர்கள் வசதிபடைத்தவர்கள் என்று இரண்டு பிரிவு பிரிப்பது கடினமான ஒன்று. ஏழை எளியவர்களாக இருந்தால் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் போன்ற மற்ற வசதிகள் எல்லாம் கொடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று ஒதுக்குகிறோம், அதிலே யார் யார் பிற்படுத்த மக்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு இடம் கிடைக்கிறது, அதிலேயும் வசதி படைத்தவர்களுக்குத்தான் கிடைக்கிறது, ஏழை எளியவர்களாக இருக்கிறவர்களுக்குக் கிடைக்கவில்லை என்கிறார்கள், அப்படிப்பட்ட நிலைமை சில குறிப்பிட்ட கல்லூரிகளிலே வேண்டுமானால் இருக்கலாம், எல்லா இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. குறிப்பாகச்

1975 அக்டோபர் 23]

சொல்லவேண்டுமானால் புகுமுக வகுப்பிற்குப் பல்வேறு இடங்களிலே இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற இடங்களில் புகழ்பெற்ற சில குறிப்பிட்ட கல்லூரிகளில் வேண்டுமானால்—அப்படிப்பட்ட கல்லூரிகளிலேதான் சேரவேண்டுமென்று பலர் நினைக்கின்ற காரணத்தால்—இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோன்ற குற்றச்சாட்டு அப்படிப்பட்ட கல்லூரிகளைத் தவிர வேறு பல கல்லூரிகளிலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி சேமிப்பு வங்கித் திட்டம்

***4 வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பள்ளி சேமிப்பு வங்கித் திட்டம் ஏதேனும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளி சேமிப்பு வங்கித் திட்டம் 1972-73-ல் அமுலாக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இது ஒரு சிறந்த திட்டமாகையால் மாணவர்களிடையே ஆரம்பத்திலிருந்து இப்படிப்பட்ட சிக்கன சேமிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய முறையைக் கொண்டுவந்தால் நாட்டிற்கு நல்லதல்லவா? ஆகவே இதை ஒரு மாரல் பாடமாக அமைத்து ஆரம்ப காலத்திலிருந்து போதிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1972-73 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள கல்லூரிகளிலே கொண்டுவரப்பட்டது. பள்ளி சேமிப்பு வங்கித் திட்டத்தை அமல்படுத்திக்கொண்டு வருகிறோம். அதை மேலும் ஊக்குவிப்பதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கம் மாணவர்கள் வங்கிகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சேமிப்பு மனப்பான்மையைப் பெறவேண்டுமென்றும் கொண்டுவரப்பட்டது. இதற்காக மத்திய அரசு உதவி செய்கிறது. அந்த உதவிகளைப்பெற்று நாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறோம். மேலும் இந்தத் திட்டத்தை ஊக்குவிப்